# அஜாதவாதம்

## பார்ப்பவனால் படைக்கப்படும் நிகழ்வு!



ப்ரக்ஞன்

# அஜாதவாதம்

பார்ப்பவனால் படைக்கப்படும் நிகழ்வு!

தெளிவுரை

ப்ரக்ஞன்

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | அஜாதவாதம் |
| **தெளிவுரை** | : | ப்ரக்ஞன் |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2020 |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **பக்கங்கள்** | : | 24 |
| **விலை** | : | அக விழிப்பு |


| | | |
|---|---|---|
| **பதிப்பாளர்** | : | ஓம் கிராபிக்ஸ்<br>கோயமுத்தூர். |

# முகவுரை

சித்த நினைவுஞ் செயுஞ்செயலும் நீயென வாழ்
உத்தமர்கட் கான உறவே பராபரமே.

– தாயுமானவர்

எல்லா வேதாந்த நூல்களும் **குரு – சிஷ்ய** ஸம்வாத ரூபத்தில்தான் உள்ளது. அதே பாரம்பரியத்தை தொடர்ந்து பல நூல்கள் வந்துள்ளன. அவைகளில் நம் அனைவருக்கும் மிகவும் அறிமுகமாகி, பிரசித்த பெற்ற நூல் பகவான் ஸ்ரீ பாதராயணர் அருளிய **"பகவத் கீதை"** ஆகும்.

இந்த நூல் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும், அர்ஜுனனும் உரையாடுவது போன்று அமைக்கப்பட்டுள்ளது.

பகவத் கீதையை எடுத்துக்கொண்டால், பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு அர்ஜுனன் சீடன். இதில் மிக முக்கியமானது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் சிஷ்யனான அர்ஜுனனின் மன நிலையிலுள்ள வித்தியாசம். அவனது மனோ நிலை ஒரு விதமான விரக்தி முகமாகக் காணப்படுகிறது.

அந்த நூலின் பின்புலமோ, ஒரு பரம்பரையே உற்றார், உறவினர்கள் என எல்லோரும் இரு கட்சிகளாகப் பிரிந்து

இருந்துக் கொண்டு, சொத்துக்காக சண்டைக்குத் தயாராக நிற்கும் யுத்தக் களம்.

அந்த யுத்தத்திற்கு வந்த மாவீரன் அர்ஜுனன் மனம் தளருகிறான். வில்லையும், அம்பையும் கீழே போட்டுவிட்டு நான் ஏன் யுத்தம் செய்ய வேண்டும்? என்று கேள்வி எழுப்புகிறான்.

அர்ஜுனன் சிறந்த வீரன்தான். ஆனால், அவன் பெரிய அறிவாளி அல்ல. சாதாரண மனிதன். ஆசா, பாசங்களும், விருப்பு, வெறுப்புக்களும் கொண்ட ஒரு சராசரி மனிதன்.

ந ச சக்னோம்யவஸ்தாதும் ப்ரமதீவ ச மே மன: |
நிமித்தானி ச பச்யாமி விபரீதானி கேசவா ||

கேசவா, என்னால் நிற்கக்கூட இயலவில்லை. என்னுடைய மனம் சுழல்கிறது. கேடுடைய சகுனங்களை காண்கிறேன் என்கிறான் அர்ஜுனன்.

அவன் யாரிடம் கேள்வி எழுப்புகிறான்?

தன் தோழனிடம். அந்த தோழனாக இருந்து பதில் அளிக்கின்ற பகவான் ஸ்ரீகிருஷ்ணரோ தெய்வீகம் பொருந்தியவர். அவர் அளிக்கின்ற பதில்கள் அர்ஜுனனுக்கு

மட்டுமின்றி, எல்லா சாமானியர்களுக்கும் பொருந்தக் கூடிய விதத்தில் உள்ளன.

ஆகவே, **பகவத் கீதை** கர்மயோகம், பக்தியோகம், சன்யாஸயோகம், ஞானயோகம் எனறு பல மார்க்கஙகளை விளக்குவதாக அமைந்துள்ளது.

அதனால், படிக்கின்ற பலருடைய மனங்களில், அதுவே குழப்பத்தையும் உண்டாக்குவதாக உள்ளது. அர்ஜுனனே! அதுப்போன்ற குழப்பத்திற்கு ஆளாகி, அவரிடம் கேள்விகள் பல கேட்கின்றான்.

அடுத்து, **அஷ்டாவக்கிர கீதை** என்ற நூலிலோ மஹாராஜா ஜனகர் யுத்தக்களத்தில் நிற்கவில்லை. சாந்தியும், சமாதானமும் நிறைந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தார். அவர் மனதில் எந்த சஞ்சலமும் இல்லை. அத்துடன், அவர் சிறந்த அறிவாளியாகவும் இருந்தார்.

ஆகவே, **"அஷ்டாவக்கிர கீதை"** ஒரு அறிவு பூர்வமான சம்வாதமாக அமைந்துள்ளது. இந்த நூலில் பல இடங்களில் அஷ்டாவக்கிர முனிகளுக்கு ஈடாக, அரசர் ஜனகரும் கருத்துக் களைத் தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து நமக்குத் தெரிய வேண்டிய உண்மை என்னவெனில், வேதாந்த நூல்களில் வருகின்ற குருவானவர்,

தங்களுடைய சீடர்களின் மன நிலைக்கு ஏற்ப, அவனுக்கு ஆத்மஞானத்தை அளிக்கும் பல்வேறு வித்தியாசமான அணுகுமுறைகளை கையாண்டுள்ளார்கள்.

அவர்கள் எல்லாருடைய நோக்கமும், ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைப் பற்றி விளக்குவது ஒன்றுதான். இருந்தாலும், அதிலே சிலருக்கு முக்தி அடைய முடிகிறது. வேறு சிலருக்கு முக்தி கிட்டாமலேயே போய் விடுகிறது.

ஏன்? என்ற கேள்விக்கு பதிலாக, இந்த நூல்கள் **'ஜீவ நானா வாதத்தை'** (பல்வேறு சீவர்களின் அறிவுக்கு ஏற்றவாறு) ஆதாரமாகக் கொண்டு, அனேக விளக்கங்கள் அளிக்கப் படுகின்றன.

இன்னும் சில குருமார்களோ, சீவர்களின் **'விவகார ஸத்'** அல்லது **'அஞ்ஞான ஸத்'** என்கிற வாதத்தை எடுத்துரைக் கின்றனர்.

பகவான் **ஸ்ரீஆதிசங்கரர்** மற்றும் பிற ஆச்சாரியர்கள் எழுதிய நூல்கள் அல்லது பகவான் **ஸ்ரீபாதராயணர்** எழுதிய பகவத்கீதையும் கூட இந்த விதிமுறைகளை அனுசரித்து காணப்படுகின்றது.

நானா ஜீவ தத்துவத்தின் துணையில்லாமலும், அல்லது சீவர்களின் விவகார வேற்றுமைகளின் அடிப்படைகள்

இல்லாமலும், இந்த ஆத்ம ஸாக்ஷாத்காரத் தத்துவத்தை விளக்கிய மஹான்களும் இந்த பாரத தேசத்தில் பலர் உள்ளனர்.

இந்த தத்துவ முறையை **"திருஷ்டி சிருஷ்டி வாதம்"** அல்லது **"ஏக ஜீவ வாதம்"** என்றும் கூறுவார்கள். மாண்டூக்கிய உபநிஷத்திலும் கௌட பாத காரிகையிலும், இந்த **'திருஷ்டி சிருஷ்டி வாதம்'** தெளிவாகத் தெரிகிறது.

அவ்வாறே, பகவான் ஸ்ரீ வசிஷ்ட மகரிஷி தன்னுடைய சிஷ்யன் ராம பிரானுக்கு உபதேசித்த **"யோக வாசிஷ்டம்"** என்ற நூலிலும், பல இடங்களில் இந்த வாதம் காணப் படுகின்றது.

அவ்வாறே, பகவான் ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் இயற்றிய ஆத்ம போதத்திலும், கீழ்க்கண்ட சுலோகங்கள் இதற்கு ஒரு எடுத்துக்காட்டுகள் எனலாம்.

4. परिच्छिन्न इवाज्ञानात्तन्नाशे सति केवलः |
स्वयम् प्रकाशते ह्यात्मा मेघापायेंऽशुमानिव ||

பரிச்சி2ன்ன இவாஜ்ஞானாத்தன்னாஸே2 ஸதி கேவல: |
ஸ்வயம் ப்ரகாஸ2தே ஹ்யாத்மா மேகா4பாயேம்'ஸூ2மானிவ ||

5. अज्ञान कलुषं जीवं ज्ञानाभ्यासाद्विनिर्मलम् |
कृत्वा ज्ञानं स्वयम् नश्येज्जलं कतकरेणुवत् ||

அஞ்ஞான கலுஷம்’ ஜீ வம்’ ஜ்ஞானாப்4யாஸாத்3வினிர்மலம் |
க்ரு’த்வா ஜ்ஞானம்’ ஸ்வயம் நஸ்2யேஜ்ஜலம்’ கதகரேணுவத் ||

எங்கும் நிறைந்திருக்கும் ஆன்மாவைப் பற்றிய அறியாமையினால், நமது சக்திக்கு ஒரு எல்லைக்குள் உண்டு என நினைக்கிறோம். அத்தகைய ஆன்மாவின் அபரிமிதமான சக்தி ஒரு எல்லைக்குள் அடக்கப்பட்டது போன்று காணப் படுகின்றது.

அந்த அறியாமை அழிந்ததும், மேகத்தால் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சூரியன் காற்று வீசுவதினால் மேகம் கலைந்ததும் எப்படி வெளிச்சமாக, தெள்ளத் தெளிவாகத் தெரியுமோ? அதுப்போல, அறிவாகிய நம் அறியாமைகள் ஆத்ம ஞான உபதேசத்தால் விலக்கப்படும் பொழுது, ஒன்றேயான நமது உண்மையான **ஸ்வபாவ சொரூபம்** வெளிச்சத்திற்கு வருகிறது.

இந்த சுலோகங்களில் மூலம், **பகவான் ஸ்ரீஆதிசங்கரர்** அஞ்ஞானவாதத்தின் துணையோடு, அத்வைத சித்தாந்தத்தை இங்கு விளக்க முற்படுகிறார்.

இதை, பகவான் ஸ்ரீஆதிசங்கரர் **‘ஸ்வாத்மன சம்வாதம்’** என்ற அந்த நூலில் ஏக ஜீவ வாதத்தை கையிலெடுத்துக் கொண்டிருக்கிறார். அதுப்போன்றே, பகவான் **வசிஷ்ட மகரிஷி** எழுதிய யோக வாசிஷ்டத்திலும், பல இடங்களில் ஏக ஜீவவாதம் விளக்கப்பட்டுள்ளது.

அதுப்போலவே, ஆதி சேஷரால் இயற்றப்பட்ட **‘பரமார்த்த சாரம்’** என்ற நுலிலும், இந்த தத்துவ விசாரம் வெளிப்படையாக தெரிகிறது.

மேலும், காசி மாநகரிலே வாழ்ந்து மறைந்த மகான் மதுசூதனசரஸ்வதியின் **‘அத்வைத சித்தி’** என்ற நூலிலும், அதனுடைய வியாக்கியானமான பிரம்மானந்த சரஸ்வதியின் **‘ப்ரம்மாண்ந்தீயம்’** என்ற நூலிலும், ஏக ஜீவ வாதம் அல்லது **‘திருஷ்டி - சிருஷ்டி’** வாதம் என்ற தத்துவம் விளக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு, மிகவும் பழமையான நூல்களும், நம்மிடையே காணப்படுகின்ற நவீன வேதாந்த நூல்களும், இந்த **“திருஷ்டி - சிருஷ்டி வாதம்”** என்ற தத்துவத்தை, தங்களது தத்துவ நூல் விளக்கத்திற்கு ஊன்று கோலாக எடுத்துக் கொண்டிருந்தாலும், இது மற்ற தத்துவங்களோடு பின்னிப் பிணைந்துக்கொண்டு வருவதினால், சாதாரணமான,

படிப்பறிவற்ற, சராசரி மனிதர்களால் அவ்வளவு எளிதாகப் புரிந்துக் கொள்வது இயலாது.

இதன் காரணமாகவே, அனைவருக்கும் இந்த ஆத்ம தத்துவத்தை புரிந்துக் கொள்வதில் காலதாமதமும், தங்களின் வாழ் நாளின் இறுதிவரை, அதில் நிற்க முடியாமலும் போகிறது.

எனவே, எல்லோரும் எளிதாக **"பக்தி மார்க்கம்"** என்பதையே எடுத்துக் கொள்கின்றனர். ஆனால், அந்தப் பக்திப் பாதையில் பயணிக்கின்ற பாமரனுக்கு **"அநநன்ய பக்தி"** என்பது என்ன? என்று தெரியாததால், துவைத பக்தியிலேயே இருந்து, இறுதியில், **"நான்"** பிறந்த இருப்பிடம் தெரியாமல் இறந்தும் போகின்றான்.

இதன்காரணமாக, இவர்கள் மீண்டும் **பிறப்பு – இறப்பு** என்ற சம்ஸார சக்கரத்தில் சுற்றிக் கொண்டே இருக்கின்றனர். பிறவாப் பெரு நிலையாகிய முக்தி என்ற பதத்தை இவர்களால் இறுதிவரை அடைய முடிவதில்லை.

ஆதால், ஆத்ம ஞானத்தை அனேக முனிபுங்கவர்கள், ரிஷிகள், யோகிகள் எடுத்து, இந்த உலகத்திற்கு உபதேசித் திருந்தாலும், அதை உள்வாங்கும் மனம் சலனமின்றி இருந்தால் மட்டுமே சாத்தியமாகின்றது. அத்துடன், ஆத்ம ஞானத்தை அடைந்த ஜீவன் முக்தர்களின் **சத்சங்களை** உண்டாக்கிக் கொள்வதினாலும் இது கைகூடுகின்றது.

அஷ்டாவக்ர முனியின் “**அஷ்டாவக்கிர கீதை**” என்ற நூலில், ஏக ஜீவ வாதத்தையும், **திருஷ்டி – சிருஷ்டி** தத்துவத்தையும், அவைகளின் சுத்த சொரூபத்திலேயே தரப்பட்டுள்ளது. ஆனால், அதை படித்துப் புரிந்துக் கொள்ளக் கூடிய **மனப்பக்குவம்** மட்டும்தான் சாதகர்களுக்கு மிக, மிக அவசியம்.

எனவே, எவன் ஒருவன் இறைவனை இருமைகள் கடந்து, ஒன்றேயாகிய ஏக இறைவனாக காண ஆசைப் படுகின்றானோ? அவனே, இறைவனும், நானும் பிரிக்க முடியாத பூரணம் என்றும், அந்த பூரணத்தில் இருந்து எதைப் பிரித்தாலும், அங்கு எஞ்சியிருப்பதும் பூரணமே என்று புரிந்துக் கொள்வான்.

பூரணம் என்றால், முழுமையானது. அந்த முழுமையில் இருந்து எதை எடுத்தாலும், அங்கு எஞ்சி இருப்பது முழுமையாகிய **‘இறைவன்’** மட்டுமே என்பதை ஏற்கின்ற பக்குவமுள்ள பக்தனுக்கு மட்டுமே **‘அத்வைதம்’** என்றால், என்னவென்று புரிய வரும்.

அதாவது, ஒன்றேயாகிய ஆத்மன் **(அறிவு)** பலவாறாக பிரிந்துக் காணப்படுவதற்கு காரணம், அந்த ஆத்மனின் அறிவுப் பிரகாசம் வெளிபட்டு, அதன் விளைவாக உண்டாகிய உபாதிகளான உடல்கள் மூலம், அதன் பிரதி பிம்பமாகிய மனம்

தோன்றுகின்றது. அத்தகைய, அந்த மனம் தன்னையே அந்த உண்மை ஆத்மன் போன்று பாவித்துக் கொள்கின்றது. அதற்கு, அந்த ஆத்மன் இருப்பதினால்தான், நான் இருக்கிறேன் என்ற அறியாமை உள்ளதினால், அது தன் உண்மை சொரூபத்தை அறிய மறுக்கின்றது.

இவ்வாறு ஜீவன்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, பலவாறாக உள்ளன என்றும், அவைகளின் உபாதிகளாகிய உடல்களைப் பொருத்து, அந்த அறிவு பிரகாசிக்கின்றது என்றும், ஆனால், அவைகளுக்கு எல்லாம் ஆதாரமான அறிவு **(ஆத்மா)** ஒன்று மட்டும்தான் என்றும் கூறி, அந்த மனதிற்கு, அதன் அறியாமையை சுட்டிக் காட்டப்படுகின்றது.

அந்த அறியாமையை மனம் அறியும்போது, அதற்கு, அதனுடைய இயல்பான உண்மை ஸ்வபாவம் அல்லது சொரூபம் தெரிய வருகின்றது. இதுவே, மனம் பரம[தன்]னை அறிந்து, உணர்ந்துக்கொண்ட ஆத்மஞானம் ஆகும்.

ஆக, அத்தகைய அறிவாகிய உன்னைத் தவிர, வேறொரு ஜடப் பொருளும் கிடையாது என்று, அஜாதவாதம் அருமையான முறையில், அனைவருக்கும் தெள்ளத்தெளிவாக பல இடங்களில் எடுத்துரைக்கின்றது.

பொதுவாக, இந்த பௌதிக உலகில் வெளிப்படையாகத் தெரிகின்ற ஜீவன்களுக்குள் நிலவும் வித்தியாசங்களையும்,

**ஞானம் – அஞ்ஞானம்** என்ற இருமைகளின் அடிப்படையில் உண்டான வாதங்களுக்கு, நேரடியாக எந்த பிரதிவாதமும் காணப்படவில்லை என்றாலும், இந்த சம்வாதத்தின் அடிப்படையாக உள்ள **'திருஷ்டி - சிருஷ்டி தத்துவம்'** இதுப்போன்ற சந்தேகங்களை இல்லாமல் செய்து விடுகின்றன.

ஆகவே, **'அஜாதவாதம்'** என்ற, **திருஷ்டி – சிருஷ்டி** தத்துவத்தைக் குறித்து நல்லதோர் ஞானம் நமக்கு உண்டாக வேண்டும்.

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**

# 1. அஜாத வாதம்

பிரபஞ்சம் என்று ஒன்று படைக்கப்படவேயில்லை. பிரபஞ்சம் என்பது மனித மனதின் சிருஷ்டியே. தேச, கால வேற்றுமைகள் என்பது நமது சங்கல்பங்களே.

தேசம், காலம், போன்ற காரண காரியங்கள் எல்லாம் நம்முடைய மனதில் தோன்றுபவைகள்தான். ஆத்மா (அறிவு) ஒன்று மட்டும்தான் உண்மையாக உள்ளது.

அதை நாம் புரிந்து கொள்ளும் பொழுது மட்டும்தான், நமது அறியாமைகள் விலகி, அறிவு வெளிச்சம் ஏற்படுகிறது. அந்த அறிவு ஒளியில் பிரகாசத்தினால், அறியாமையில் தோன்றிய இந்த பிரபஞ்சம் மறைந்து விடுகின்றது.

அதாவது, ஆன்மாவின் (அறிவின்) உண்மை சொரூபத்தை அறியாத நிலையில், மனம் அறியாமையில் மூழ்கி, நீ, நான், அது, இது என்ற வேறுபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டு, ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங் களின் அடிப்படையில், இந்த பிரபஞ்சமாகிய ஒரு மாயா உலகத்தை சிருஷ்டிக்கின்றது.

இது, நாம் கனவுகளில் காணுகின்ற உலகத்திலிருந்து சற்றும் மாறுபட்டதல்ல. கனவு கலைந்து, நாம் விழித்து எழும் பொழுது, அந்த கனவு உலகம் காணாமல் போய் விடுவதை நம் அனுபவத்தில் நான் அனுதினமும் அடைகிறோம்.

நமது வாழ்விற்கும், நாம் அனுதினமும் காணுகின்ற கனவுகளுக்குமுள்ள வித்தியாசம் என்பது, அவைகளுக்காக மனம் எடுத்துக் கொள்ளும் காலத்தைச் சார்ந்தது.

அதனால், கனவு உலகம் என்பது, மனம் கற்பிதமாக படைத்தவற்றில் காலம் சிறியதாகவும், நனவு உலகம் என்பது, இந்த மனம் விழிப்பு நிலையில் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் அடிப்படையில், படைத்துக்கொண்ட சிறிது நீண்ட காலமாகவும் இருப்பதுப்போல உள்ளது.

இதை அறிந்துக் கொண்டால், மனதின் அனைத்து அறியாமைகள் அகன்று, கால, தேசத்திற்கு கட்டுப்படாத நிலையில், அந்த ஒன்றேயாகிய பரமனாய் தன்னை அந்த மனம் அறியும்.

இதுவே, **அஜாதவாதம்** எனப்படுகின்றது.

# 2. திருஷ்டி – சிருஷ்டி வாதம்

இதுவரை கூறிய, **“அஜாத வாதம்”** என்பதை எல்லோராலும், அவ்வளவு எளிதாக ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்களால், அதை ஜீரணிப்பது சற்று கடினமாகவே இருக்கும்.

இதையே, மற்றொரு விதத்தில் எடுத்துக் கூறுவதுதான் இரண்டாவது தத்துவம். அதை **“திருஷ்டி சிருஷ்டி வாதம்”** என்று எளிமையாக கூறப்படுகிறது.

அதாவது, **“நான்”** என்ற எண்ணம் எப்போது மனதில் உதிக்கின்றதோ? அப்போதே, இந்த உலகம் உண்டாகி விடுகின்றது. ஆக, இந்த **நான்** என்ற ஒரு எண்ணம், மற்ற அனைத்து எண்ணங்களும் காரணம் ஆகின்றது.

அதாவது, நான் காண்கிறேன், நான் செய்கிறேன், நான் இங்கிருக்கிறேன், நான் சுகமாக இருக்கிறேன், நான் துக்கமாக இருக்கிறேன், என எல்லாமே, அந்த **“நான்”** எனும் ஒரு எண்ணத்தின் வாயிலாக எழுந்த மற்ற எண்ணங்கள் ஆகும்.

அதன் அடிப்படையில், **“இந்த உடலே நான்”** என்ற தேகாபிமானம் என்பதும் உண்டாகி விடுகின்றது. அதனால், **‘நான் இங்கு இங்கிருக்கிறேன்’** என்றால், இந்த உடல்

இங்கிருக்கிறது என்று பொருள். **‘எனக்கு வலிக்கிறது’** என்றால், இந்த உடலுக்கு வலிக்கிறது என்று பொருள்.

இந்த உடல் அபிமானம் என்ற நான் மறைந்து, உண்மையான **“நான்”** அறியபப்டும் பொழுது, இந்த தேச கால வித்தியாசங்கள் மறைகின்றன.

அந்த உண்மையான நான் என்பதற்கு, உடல் இல்லாத காரணத்தினால், வலியும் தெரிவதில்லை. ருசியும் தெரிவது இல்லை.

அத்தகைய உண்மையான **“நான்”** என்ற அறிவாகிய ஆன்மாவுக்கு எந்த அனுபவமும் கிடையாது.

இதை **திருஷ்டி–சிருஷ்டி வாதம்** என்று கூறுகிறார்கள்.

இதுவும், அந்த அஜாதவாதமேதான். சற்று, வேறு விதமாக விளக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்!

# முடிவுரை

இந்த உலகம் நம் புலன்கள் அடிப்படையில் நம்முடைய கண்கள் என்ற புலன் பார்க்கும் பார்வையில்தான் நிலை கொள்கிறது. அதன்மூலம், நான் பார்க்கிறேன் என்று ஒரு நான் முதலில் தோன்றுகிறது. அதற்குப்பிறகு, உலகம் தோன்றுகிறது. அப்படிப் பலவாறாக இந்த உலகத்தை நம் மனதுதான் சிருஷ்டிக்கின்றது. ஆகவே, இந்த நான் மறைந்தால் உலகமும் மறைகின்றது.

பெரும்பாலானவர்களுக்கு, இந்த உலகம் மறைகின்றது என்றவுடன் நம் கண்களில் இருந்து மறைந்து விடுவதாக கற்பனை செய்துக் கொள்கிறார்கள். அல்லது, ஐயோ! மறைந்து விடுமா? என்று பயப்படுகின்றார்கள்.

அதற்குக்காரணம், அவர்களிடம் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான அறியாமை எண்ணங்களின் மூலம், **"நான்"** என்ற பரம[தன்]னைப் பற்றிய புரிதல் இல்லாமல், இந்த **'நான்'** என்பதை தன் உடலாகவும், தனக்கு வேறாக உள்ள மற்ற **'நான்'**களை, இந்த உலகமாகவும் அபிமானித்துக் கொள் கிறார்கள்.

மற்ற '**நான்கள்**' எப்படி உருவானது?

அதுவும், நம் மனமே, இது, இது இன்னது என்று அறிந்துக்கொள்ள ஆர்வம் காட்டியதின் விளைவாக உண்டான வைகள் என்பதும், அதே மனதிற்கு புரிய வேண்டும். அப்போது மட்டும்தான் மனம், தன் அறியாமைகளை அகற்றி, அந்த அறிவாக பிரகாசிக்க முடியும்.

அதாவது, இந்த உலகம் இல்லாமல் போகின்றது என்பதன் உண்மையான பொருளை நாம் எப்படிப் புரிந்துக் கொள்ள வேண்டுமெனில், என்னுடைய மனம் கற்பித்துக் கொண்ட இந்த உலகம் அறிவாகிய என்மீது ஏற்றிவைக்கப் பட்டுள்ளது என்ற ஞானம் அந்த மனதிற்கு உண்டாக வேண்டும். அப்போதுதான், நம் மனதைப் பொருத்தவரை, இந்த உலகம் மாயை என்பது புரியவரும். அதை அறிந்துக் கொண்ட மனதை உடையவன் தான் உண்மையில், அந்த அறிவாக தன்னை அறிந்துக் கொண்ட ஆத்மஞானி.

அதாவது, ஒருவன் இறந்தபிறகு, அவனுக்கு மட்டுமே இந்த உலகம் இல்லாமல் போகின்றது போல, அந்த அறிவாக தன்னை உணர்ந்துக் கொண்ட உத்தம ஞானிக்கு உடல் உள்ளபோதே, இந்த உலகம் இல்லாமல் போகின்றது. அவனைத்தான் ஜீவன் முக்தன் என்று அழைக்கிறோம்.

இங்கு என்ன புரிந்துக் கொள்ள வேண்டுமெனில், இந்த **‘அஜாத வாதம்’** என்ற தத்துவம் மூலம், மனதின் அறியாமைகள் அகன்று, அந்த அறிவாகத்தான் **“நான் இருக்கிறேன்”** என்ற உண்மை உணரப்படும்போது, அதை அறிந்துக் கொண்ட என்னுடைய மனதிற்கு மட்டுமே, இந்த உலகம் என்மீது (அறிவின்மீது) ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்பது புரியவரும்.

ஆனால், மற்றவர்களுக்கு இந்த ஞானம் இல்லாத காரணத்தினால், இந்த உலகம் உண்மையில் உள்ளது போன்று நினைத்துக் கொள்கிறார்கள். அது அவர்களது அன்றாட வாழ்க்கையில், நேரடி அனுபவத்தில் நடைப் பெறுகின்ற மூன்று அவஸ்தைகள் (விழிப்பு, கனவு, ஆழ் உறக்கம்) ஆகும்.

உண்மையான முக்தி மார்க்கத்தை விளக்கும் வழி முறைகள் கீழ்க்கண்ட கட்டமைப்புடன் காணப்படும் அதுவே, அஜாதவாதம் என்று அழைக்கப்படும்.

உண்மை நிலை – என்றும், எவர்கும் இயல்பாக உள்ள நிலை அது. அதை வெளியேயிருந்து கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை. இதற்காக, தனியாக எந்த ஒரு முயற்சியும், பயிற்சியும் தேவையில்லை. தனக்கு வேறாக புறத்தில் எதையும் தியானம் செய்ய வேண்டியதில்லை. ஒன்றையும் மனம் நினையாமல், ஏதேனும் ஒன்றைப்

பற்றிக்கொண்டு அதில் தியானம் செய்யாமல், மனதளவில் உண்மையை உணர்ந்துக்கொண்டு, **‘சும்மா இருத்தலே’** அதற்கான மார்க்கம்.

- நீ! பற்றற்ற, மாசற்ற, சுயம் பிரகாசன். நீ! சமாதி மற்றும் ஏனைய மார்க்கங்களை தேடி ஏன் ஓடுகிறாய். அதுவே உன் பந்தம்.

- சித்த விருத்தியை அடியோடு நிறுத்திவிடு. மனதின் எண்ணங்களாக எழுகின்ற சித்த விருத்தியால், எந்த ஒரு பயனும் இல்லை.

- நீ பந்தமற்று, முக்தனாகவே, உண்மையான ஆத்மாவாகவே இருக்கிறாய்.

- பிரபஞ்சமனைத்தும் உன் மனதின் கற்பனையே. உன் மனமும் கற்பனையே. ஆத்மா ஒன்று மட்டும்தான் நிஜம்.

- கரும நினைவு எவ்வாறு அறியாமையினால் எழுகிறதோ? அவ்வாறே கருமத்தை துறத்தலும் அறியாமையே ஆகும். இந்த உடல் உள்ளவரை எந்த கர்மத்தையும் துறக்க முடியாது. உண்பது, உறங்குவதுகூட செயல்கள்தான் என்பதினால், கர்மத்தை துறத்தல் என்பது, தன்னை அறிந்துக் கொண்ட அறிவின் மூலம் அதை, கர்ம யோகமாக மாற்றிக் கொள்வது சாத்தியம் ஆகும்.

- ஆகவே நிவிருத்தியை விரும்புவதும், பிரவிருத்தியை வெறுத்தலும் பாழ்.

**ஓம் தத் ஸத்!**

# அஜாதவாதம்

## பார்ப்பவனால் படைக்கப்படும் நிகழ்வு!



ஒன்றேயாகிய ஆத்மன் (அறிவு) பலவாறாக பிரிந்துக் காணப்படுவதற்கு காரணம், அந்த ஆத்மனின் அறிவுப் பிரகாசம் வெளிபட்டு, அதன் விளைவாக உண்டாகிய உபாதிகளான உடல்கள் மூலம், அதன் பிரதி பிம்பமாகிய மனம் தோன்றுகின்றது.

அத்தகைய, அந்த மனம் தன்னையே அந்த உண்மை ஆத்மன் போன்று பாவித்துக் கொள்கின்றது. அதற்கு, அந்த ஆத்மன் இருப்பதினால்தான், நான் இருக்கிறேன் என்ற அறியாமை உள்ளதினால், அது தன் உண்மை சொரூபத்தை அறிய மறுக்கின்றது.

இவ்வாறு ஜீவன்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, பலவாறாக உள்ளன என்றும், அவைகளின் உபாதிகளாகிய உடல்களைப் பொருத்து, அந்த அறிவு பிரகாசிக்கின்றது என்றும், ஆனால், அவைகளுக்கு எல்லாம் ஆதாரமான ஆத்மன் (அறிவு) ஒன்று மட்டும்தான் என்றும் கூறி, அந்த மனதிற்கு, அதன் அறியாமையை சுட்டிக் காட்டப்படுகின்றது.